**என்.ஜி.எம். கல்லூரி**
பொள்ளாச்சி

Department of Human Excellence

# சமுதாய விழுமியங்கள்



**மனிதவள மாண்புத் துறை**

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | மனிதனின் பரிணாமம் | .... | 7 |
| 2. | சமுதாயத்தின் அங்கமே மனிதன் | .... | 18 |
| 3. | மனித வேறுபாட்டிற்கான காரணங்கள் | .... | 22 |
| 4. | மனத்தூய்மை தரும் சமுதாய நலன் | .... | 29 |
| 5. | கல்வியும் சமுதாயமும் | .... | 35 |
| 6. | போதை பழக்கங்களிலிருந்து விடுதலை | .... | 39 |
| 7. | சமூக ஏற்றத்தாழ்வும் தீர்வுகளும் | .... | 43 |
| 8. | சாங்கியத் தத்துவம் | .... | 52 |
| 9. | மதங்களின் மையக் கருத்து | .... | 61 |
| 10(A) | பஞ்சபூத நவகிரக தவம் | .... | 67 |
| 10(B) | யோகாசனங்கள் | .... | 75 |

# 8. சாங்கியத் தத்துவம்

**P. வீரசித்தி விநாயகன்,**
**K. சாந்தி**
உதவிப்பேராசியர்கள்,
மனிதவள மாண்புத்துறை,
என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி.

**முன்னுரை :**

சாங்கியம் இந்தியத் தத்துவங்களில் முதன்மையான தத்துவம் ஆகும். இது கடவுள் வெளியே இல்லை நம்முள் இருக்கின்றார் எனும் தத்துவக் கொள்கையைக் கொண்டதாகும். சாங்கியத் தத்துவத்தை நிறுவியவர் கபிலர் என்று நம்பப்படுகிறது. பிரகிருதி (இயற்கை) புருடன் (அறிவுள்ள பொருள்) ஆகிய இரு பொருட்கள் பற்றி பேசுகின்ற சடவாத தரிசனமாகும். இத்தத்துவத்தில் பரம்பொருள் (இறைவன்) குறித்து எதுவும் கூறப்படவில்லை. இதனுடைய உலகத் தோற்றம் படைப்பு குறித்தான கருத்துக்களை மட்டும் அத்வைத வேதாந்திகள் ஏற்றுக் கொள்கின்றனர்.மேலும் உலகமானது முக்குணங்களின் சேர்க்கையினால் உருவானது என்பது இதன் கருத்தாகும்

**சாங்கியம் பொருள் விளக்கம் :**

சாங்கியம் என்ற சொல்லுக்கு பொருள் பூரண அறிவு என்பதாகும். பூரணப் பொருளை பற்றி முழுமையான விளக்கங்களை உள்ளடக்கியதே சாங்கியம் ஆகும். சாங்கியத் தத்துவத்தின் நோக்கம் காரண காரிய விளைவுகளை ஆராய்தல், ஆழமான மற்றும் சிந்தனைத் திறனை மேம்படுத்துதல்,கேள்வி மற்றும் விவாதம் மூலம் உண்மையை அறிந்து உணர்வது ஆகும்.உலகபடைப்பு மற்றும் சீவராசிகளின் தோற்றம் பற்றிய சிந்தனைகள் உபநிடதம் மற்றும் பகவத் கீதையில் அதிகமாக கையாளப்பட்டுள்ளன. பகவத்கீதையில் சாங்கியம் என்பதற்கு ஞான யோகம் என்று பொருள் கூறப்படுகிறது.

**சாங்கியத்தின் அடிப்படை தத்துவம் :**

சாங்கியத்தின்படி மாற்றம் அடைவது அறிவுள்ள பொருளாகக் கருதப்படுவதில்லை. ஆனால் மாற்றம் அடையாத ஒன்றே அறிவு சொரூபமாக கருதப்படுகிறது. உபநிடத் தத்துவத்தின்படி இந்த உலகம் ஒரே ஒரு மூலப்பொருளில் இருந்து தான் தோன்றுகிறது அப்பொருள் அறிவு சொரூபமானது என்பன சாங்கியத்தின் அடிப்படையாக அமைகின்ற கருத்துகள்

**சத்காரிய வாதம்:**

பொதுவாக ‘காரணம் இன்றிக் காரியம் இல்லை‘ என்பது செயல்விளைவுத் தத்துவமாகக் கருதப்படுகிறது. ஆனால் சத்காரிய வாதக் கோட்பாட்டின் படி ‘காரண நிலையிலும் காரணம்

உண்டு‘ என்பது சத்காரிய வாதத்தின் கோட்பாடாகும். உதாரணமாக எள் காரணம் அதிலிருந்து உருவாக்கப்படும் எண்ணெய் காரியம் ஆகும். சத்காரிய வாதத்தின்படி எண்ணெய் என்பது எள்ளில் முன்னமே அடங்கியுள்ளது என்ற கருத்தை வாதமாகக் கொள்கிறது. மேலும் சில உதாரணங்களின் மூலம் சத்காரிய கோட்பாட்டை ஆராய்வோம். மண் காரணம் பானை காரியம் புடவை நூலிலும் பானை மண்ணிலும் முன்னமே உள்அடங்கி இருக்கின்றன என்பது சத்காரிய வாதமாகும்.

**மறுப்புக்கு மறுப்பு**

- மறுப்புக்கு மறுப்பு என்ற கோட்பாட்டின் படி காரண காரியம் மற்றும் காரண நிலையிலும் காரணம் உண்டு என்ற நிலையையும் தாண்டி மூலகாரண நிலையை தனது வாதக் கோட்பாட்டில் வலியுறுத்துவது மறுப்புக்கு மறுப்பு என்ற கோட்பாடாகும். அதாவது காரணம் அதன் காரியத்தில் இல்லையாயின் எவ்வளவு முயன்றாலும் அதனை உருவாக்க முடியாது என்பதாகும்.

- அதாவது எள் காரணம் எண்ணெய் காரியம் என்பதை சத்காரிய வாதம் மறுக்கிறது. எண்ணெய் முன்னமே எள்ளில் அடங்கியுள்ளது என்ற வாதக் கோட்பாட்டை வலியுறுத்துகிறது. சத்காரிய வாதக் கோட்டை மறுக்கும் கொள்கைக்கு மறுப்புக்கு மறுப்பு வாதமாக கருதப்படுகிறது. எண்ணெய் எள்ளில் முன்னமே அடங்கியுள்ளது என்பதை மறுத்து எண்ணெய் எள்ளில் இருந்து ஒருவன் பிரித்து எடுக்கும் செயலைச் செய்யாமல் எப்படிச் சாத்தியம் ஆகும் என்ற வாதக் கோட்பாட்டை முன்னிறுத்துவது மறுப்புக்கு மறுப்பு என்ற கொள்கையாகும். சுக்கும ரூபத்தில் உள்ள பானையை தூல நிலையில் உள்ள குயவன் பானையாகச் செய்யாவிடில் பானை என்ற ஒன்றே இருந்திருக்காது என்பது மறுப்புக்கு மறுப்பு கொள்கையாகும்.

இவ்விரு கோட்பாட்டின் படி ஒவ்வொரு செயலுக்கும் காரண காரியத்தையும் மற்றும் மூலகாரணத்தையும் ஆராய்ந்து தெளிவு பெறுவதின் அவசியத்தை இவ்விரு வாதக் கோட்பாடுகளும் இங்கே வலியுறுத்துகின்றன.

## கேள்வி ஞானத்தின் அவசியம்:

கல்வியின் மூலம் கற்றல மனப்பாடம் செய்தல் தேர்வு எழுதுதல் என்ற நிலைகளைத் தாண்டி மாணவர்கள் கற்றல் கேட்டல் சிந்தித்தல் ஆராய்தல் தெளிதல் என்ற நிலையில் மனதை இயக்கி வாழ்வில் ஏற்படும் துன்பங்களுக்கும். சிக்கல்களுக்கும் காரண காரியத்தை ஆராய்ந்தால் அவன் ஒரு மாண்பு மிக்க மனிதனாகத் திகழ முடியும் என்பதை இப்பாடம் நமக்கு உணர்த்துகிறது. கற்றலின் மூலம் நமக்குள் தோன்றும் கேள்விகளே நம்மை வாழ்வில் ஒரு மிகப் பெரிய சிந்தனையாளராக, தலைவராக சாகனையாளராக உருவாக வழிவகை செய்யும் என்பது திண்ணம்.

எப்பொருள் எத்தன்மையதாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு — குறள்.

மேற்கண்ட குறளின் மூலம் ஒவ்வொரு பொருளுக்கும் மூலப்பொருளாக உள்ளது எது என்பதை உணரும் அறிவே முழுமையான அறிவாகும் என்கிறார் திருவள்ளுவர். ஒரு பொருளைப் பகுத்துக் கொண்டே போனால் கடைசியில் பகுக்க முடியாத பொருள் எதுவோ அதுவே அணு என்று விஞ்ஞானிகளால் கருதப்படுகிறது. இன்றைய கால கட்டத்தில் விஞ்ஞானிகள் அணுவுக்கும் மூலமாக ஒன்று உள்ளது என்பதைக் கண்டுபிடித்து அதற்கு God Particle என்று பெயரிட்டிருக்கிறார்கள். இவ்வாறு உண்மையை அறிய வேண்டுமாயின் தொடர் ஆராய்ச்சியும் நுண்ணறிவும் மிகவும் அவசியமாகும். மேலும்அறிவை அறிவால் அறியும் அறிவே அறிவு என்கிறார் வேதாத்திரி மகரிஷி அவர்கள். இது அறிவு எவ்வாறு ஞானத்திற்கு வழிவகை செய்யும் என்பதை நமக்கு உணர்த்துகிறது.

உடலில் இருந்து உயிர் தோன்றியதா? உயிரிலிருந்து உடல் தோன்றியதா? என்ற இவ்விரு கேள்விகள் ஆழமான சிந்தனைத் திறனை மேம்படுத்துகின்றன. இதற்கான விடையைக் காண வேண்டும் என்ற எழுச்சி நிலையே உண்மை எதுவாக இருக்கிறது என்பதை அறிவுப் பூர்வமாக உணரச் செய்யும் வழியாகும். சாங்கியத் தத்துவம் இந்த ஞானத்தை ஒவ்வொருவருக்கும் தன்னுடைய ஆழ்ந்த கேள்விகளாலும் வாதக் கோட்பாடுகளாலும் உணர்த்துகிறது

**மனித உடலில் மூன்று இயக்க நிலையங்கள் உள்ளன.**

மனித உடலில் மூன்று இயக்க நிலையங்கள் உள்ளன. அவை. (1) பருவுடல், (2) நுண்ணுடல், (3) காந்தஉடல் என்பனவாகும்.

### 1. பருஉடல் (Physical body) :

மனிதனின் பரு உடல் சிறுசிறு செல்களால் (**Cells**) அற்புதமாகக் கட்டப்பட்டுள்ளது. செல்கள் பஞ்சபூதங்களின் கூட்டு. ஒவ்வொரு செல்லும் ஓர் இரசாயனத்தொழிற்சாலையாக இயங்குகிறது.

### 2. நுண்ணுடல் (Astral body ) :

நுண்ணுடல்தனித்தனியே இயங்கும் விண்களால் ஆனது. இத்தகைய தனித்து இயங்கும் விண் துகள்களைச் சூக்கும உடல் என்றும் அழைக்கிறோம்.

### 3. காந்த உடல் (Causal body) :

காந்தஉடல்என்பது நுண்ணிய இறைத்துகள்களால் ஆனது. ஒவ்வொரு விண்துகளும் கோடிக்கணக்கான இறைத்துகள்களைக் கொண்டது. இறைத்துகள் தன்னைத்தானே மிக வேகமாகச் சுற்றிக் கொண்டிருக்கிறது. விண்ணிலிருந்து இறைத்துகள்கள் வெளியேறுகின்றன. அவ்வாறு வெளியேறுகின்ற இறைத்துகள் களைக்காந்த அலைகள் என்று அழைக்கிறோம்

சூக்கும உடலில் அமைந்துள்ள விண்கள் தனித்தனியே விரைவுகொண்டு இயங்கும் தற்சுழற்சியால் அவற்றிலிருந்து வெளியேறும் இறைத்துகள்களால் எழும் அலைகள் கூடிய சீவகாந்தக்களம் தான் காந்த உடல்.

இம்மூன்று இயக்க நிலையங்களும் ஒன்றுக்குள் ஒன்றாக இணைந்து, ஒன்றால்ஒன்று ஆக்கவும் காக்கவும் பெறும் ஒரு சிறப்பியக்க நிலையமே மனிதஉடல்.

**முக்குண தத்துவம்:**

சாங்கியத் தத்துவம் குணத்தை இயல்பு என்றோ அல்லது தன்மை என்றோ கருதாமல் அதற்கும் மேலே அதை கணமற்ற லேசான பொருள் என்கிறது.

சாத்வீகம்: மேல் நோக்கி எழும் பண்பு சாத்வீக குணத்திற்கு உண்டு என்கிறது சாங்கியம். உதாரணமாக நெருப்பு நீராவி மற்றும் காற்று இவற்றிற்கு மேல் நோக்கி எழும் பண்பு உள்ளது. மேலும் மகிழ்ச்சி திருப்தி போன்ற உணர்வும் மேல் நோக்கி எழும் பண்பாக கருதப்படுகிறது.

ராஜசம்: தானும் இயங்கி அனைத்தையும் இயக்குவது ராட்ஜச குணமாகக் கருதப்படுகிறது.

தாமசம்: மேற்குறிப்பிட்ட இரண்டிற்கும் எதிர்மறையானது தாமசம். அதாவது இயக்கத்தை தடுப்பது. உதாரணமாக கணம் மந்தம் சோர்வு மயக்கம் இருள் போன்றவற்றிற்குக் காரணம் தாமசம் என்கிறது சாங்கியக் கொள்கை. மேலும் சாத்வீகம் வெண்மையையும் ராஜசத்துக்கு செம்மையையும் தாமசத்துக்குக் கருமையையும் ஒப்பிடுகிறது சாங்கியக் கொள்கை..

**முடிவுரை:**

இப்பாடத்தின் மூலம் மனிதன் என்பவன் ஒவ்வொன்றிற்கும் காரண காரியத்தை உணர்ந்து செயல்படும் போது துன்பம் இல்லாத வாழ்வை வாழ முடியம். கடவுள் உலகம் பிறப்பு இறப்பு நோய் துன்பம் இன்பம் அமைதி இவற்றிற்கான காரண காரியத்தை ஆராயும் தெளிவைப் பெற்றவர்களைத் தான் நாம் ஞானிகள் என்றும் மனித உருவில் வாழும் கடவுள்களாக என்றும் கருதுகிறோம்.

எனவே ஒருவன் கேள்வி ஞானத்தின் மூலம் காரண காரிய விளைவில் தெளிவைப் பெற்று அதன் அடிப்படையில் தனது வாழ்வை அமைத்துக் கொள்ளும் போது அவனால் வாழ்வில் மகிழ்ச்சியாகவும் நிறைவாகவும் வாழ முடியும் என்பதை இப்பாடத்தின் மூலம் உறுதியாகிறது.

**நூல் குறிப்பு:**

1. கி. லட்சுமணன் **M.A. Dip. Ed.,** இந்திய தத்துவ ஞானம் ஒன்பதாம் பதிப்பு (2008). ஏஷியன் பிரிண்டர் சென்னை 600 014. (**ISBN** - 978-81-8379-458-9)**PP :** 191.

**வினாக்கள்:**

## பிரிவு அ

1. சாங்கியம் பொருள் விளக்கம் கூறுக?
2. சாங்கியத் தத்துவத்தின் நோக்கம் யாது?
3. சாங்கியத்தின் அடிப்படைத் தத்துவம் என்ன?
4. சத்காரிய வாதத்தை உதாரணங்களுடன் விளக்குக.

## பிரிவு ஆ

5. கேள்வி ஞானத்தின் அவசியம் பற்றி கட்டுரை வரைக.
6. மறுப்புக்கு மறுப்பு கொள்கை பற்றி உதாரணங்களுடன் விளக்குக.
7. சத்காரிய வாதத்தின்படி முக்குண தத்துவத்தை விளக்குக.
8. சத்காரிய வாதம் மற்றும் மறுப்புக்கு மறுப்பு கோட்பாட்டை உதாரணங்களுடன் ஆராய்க.



"When one sees that the result of his action is the benediction of the Universal Being, he realizes the Almighty. When he follows Morality, Duty and Charity he becomes a good friend and asset to the society."

- Vethathiri Maharishi

ISBN 978-93-87009-29-5

9 789387 009295

எண்.ஜி.எம். கல்லூரி

பொள்ளாச்சி

0422-2672789